

ஓலை 61 | ஓசை 181 | பிப்ரவரி 2024



# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை | [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

பிறந்த, புகுந்த குடும்பங்களுக்கு ஏற்ற நல்ல குணம், நல்ல செயல்களை உடையவளாய்த், தன்னை மணந்தவனின் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை அமைப்பவளே மனைவி.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com

# எளியோனை ஏற்ற(ல்) இனிது

பா வகை: கலிமண்டிலம் (காய்+காய்+காய்+காய்)

இல்லாரை தூற்றுதலும் இழிவேதான் என்றுணர்க
நல்லோர்கள் நாமென்றால் நயந்துதவி செய்திடுக
பொல்லாத வேற்றுமையை பொசிக்கிடவும் துணிந்திடுக
சொல்லாலும் பொருளாலும் தூக்கிசீரும் செய்வோமே

அன்பென்ற பெருஞ்செல்வம் அகத்திற்குள் விதைத்திட்டால்
இன்பத்தை பகிர்ந்திடலாம் எளியோரின் வாழ்வதிலே
துன்பத்தில் கைக்கொடுத்து துணையாக நின்றிடலாம்
ஒன்றாக யாவருமே உயர்ந்திடலாம் மண்மேலே



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயம்புத்தூர்

## பழமொழிகள் பயன்படுத்தி எழுதப்பட்ட லிமரைக்கூக்கள்

தரமான குலம் குப்பையிலே
வெறி பிடித்து அலையும் வேங்கைகளால்
தரங்கெட்ட பணம் பந்தியிலே

பூனைகளுக்கு ஏக கொண்டாட்டம்
கவர்ச்சி அறிவிப்புகளால் பல்லிளிக்கும் பட்ஜெட்
எலிகளுக்கு என்றுமே திண்டாட்டம்

பட்ட காலிலே படும்
பொறுமையாய் தாங்கி பூமியாய் வாழ்ந்தாலும்
கெட்ட குடியே கெடும்.

விளையும் பயிர்
முளையிலே வலையொளியால் தெளிவாவதால்
எல்லாமே மயிர்



பெற்ற மனம் பித்து
பொம்பளை மட்டுமே பிள்ளை ஆவதால்
ஆண்பிள்ளை மனம் கல்லு.

கவிஞர் ராஜ்⁶ ஆரோக்கியசாமி,பிக்சாண்டார் கோவில்

# உடைந்த மனது

நடக்கும் என்று
நினைத்தது வேறாக
கனவு சிதைந்தது
நனவு ஆகாதா?
மனம் உடைந்தே
கனன்று புகைய
வாழ்க்கையை முடித்திடுவோம்
வாழ்வு எதற்கு?



தற்கொலை எண்ணம்
தானாய் நுழைய
ஊராரின் ஏசியே
ஊதி நெருப்பாக
அம்மாவின் குரல்
அன்பாய்ச் சொன்னது

கவலையை விடு
களிப்புடன் எழுந்திரு
விடியலில் மாற்றம்
விரைந்தே வரும்
வாழ்ந்தாலும் ஏசும்
வீழ்ந்தாலும் ஏசும்

வஞ்சக உலகமிது
வாடாதே!எழுந்திரு!
உனக்காக வாழ்ந்திடு
ஊருக்காகவா வாழ்க்கை.
உனக்கும் கீழே
உள்ளவரை நினைத்திடு.
இதுவும் கடந்திடும்
இன்னலை அகற்று

தவறினைத் திருத்திடு
தனித்தே முயன்றிடு
உனக்கான வாழ்க்கை
உழைக்கக் கிட்டும்.
மனச்சோர்வு அகற்றி
மலரச் செய்திடு.

கனவு மெய்ப்படும்
நனவுக் காட்சியாய்!

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# வித்தியாசங்கள்

சதுரச் சதுரமாய்
சதுரங்களை
வெட்டிக் கொண்டிருக்கிறாய்
அடுத்து
வட்ட வட்டமாய்
வட்டங்களை வெட்டத் தொடங்கி
அதை
அரை காலென வெட்டுகிறாய்.
நேர்த்தியுடன்
முக்கோணத்தை சிதைக்காமல்
முழுமையாய் வெட்டத் தொடங்கி
வெட்டலின் சூத்திரத்தை
அறியத் தொடங்கிய நாளில்
மீண்டும் சதுரச் சதுரமாய்ச்
சதுரங்களை
வெட்டத் தொடங்குகிறாய்.
நீ ஆரம்பத்தில்
வெட்டிய சதுரங்களுக்கும்
இப்போது
வெட்டி முடித்த சதுரங்களுக்கும்
காணமுடிகிறது
நிறைய வித்தியாசங்கள்.
அதுபோல்
உன்னிலும்!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# அக்கினி பாதையில் சாம்பலாகும் கனவுகள்

சேர்த்து வைத்து கனவுகளே தீய்ந்து போகுதே
தீவினைகள் எல்லாம் ஒன்று கூடி கதை பேசுதே
நாளைகளை விதைப்பதற்கு இன்றைகளை விலை கொடுக்க
வேலை கிடைக்கும் என்று கையில் பட்டங்களை சுமந்து

அலைகளின் சீற்றத்தில் கால்நடை இடறி விழுந்த கணங்கள்
எல்லாம் கழண்டு போய் இழுத்துக் கொண்டு போகிறதே
சுருள் அலைகளுக்குள்ளே ஓடிவரும் நாவனங்கள்
பாடிவரும் காவியங்கள் இன்னும் ஏனோ காதுகளில் மட்டுமே

காலத்தின் வெள்ளத்தில் கடந்து போன காவிய காடுகள்
இதய அடுக்குகளில் ஆங்காங்கே அழகாய அமர்ந்திருக்க
இன்னும் புரிய மறுக்கிறது ஏனோ எஞ்சிய உயிர் காற்று
இன்னிசை சங்கீதமாய் ஒலித்துக் கொண்டிருக்க ஏக்கமாய்!



கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# அன்றையக் காதல்

திருவிழாவில் தோன்றியது
தேனாக இனித்தக் காதல்.
தயக்கத்தால் சொல்லாமல்

செல்லாக் காதலாகியதுமுண்டு
அன்னம்விடு தூது அருகியதால்
கவிதையாய் காகித காவியமாகியது.
காதல் எனும் வார்த்தையே
கெட்டவார்த்தையாய் எண்ணிட
காத்திருக்கும் கண்ணீரானது
தண்ணியடித்து தள்ளாடினாலும்
எங்கிருந்தாலும் வாழ விரும்பியது

அன்பானவர் கிட்டிடினும்
அவர்தம் முகத்தில்
அமிலமடிக்கா அழகியக்
காதல் காலமது.



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்,நாகர்கோவில்

# ஜன்னலோரம்

தொலைதூர மலைமுகட்டையும்
மேகத்தையும் கண்களால்
கைது செய்ய!
கூந்தல் கலைத்து
இமை தடவி உறங்க
வைக்கும் காற்று!
மனம் களிப்படைய
சிந்தை ஓய்வெடுக்க!
இதம் தரும்
ஜன்னலோர இருக்கை
செய்யும் மாயம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை 119

# திக்கெட்டும் ஒளிர்ந்திடும் தீந்தமிழே

அன்னைக் கற்றுக் கொடுத்த தீந்தமிழே
உசிருக்குள் உயிராய் வந்த தீந்தமிழே
பத்துப்பாட்டின் புதுமையைச் சொன்ன தீந்தமிழே
காப்பியங்களால் கதைக் கூறிய தீந்தமிழே
நாயன்மாரின் வரலாற்றைக் காட்டிய தீந்தமிழே
தமிழ் இலக்கணத்தையும் எடுத்துரைத்த தீந்தமிழே
அகத்தையும் புறத்தையும் விளக்கிய தீந்தமிழே
மானுடனுக்காக திருக்குறளை உலகிற்குயளித்த தீந்தமிழே
முத்தமிழ் அறிஞருக்கு காவியமான திந்தமிழே
எழுதுபவருக்கு ஊக்கமாய் வந்த தீந்தமிழே
ஆலயங்களில் அதிகாலையில் ஒலிக்கும் தீந்தமிழே
செம்மொழிக்கு பாட்டு எழுதிய தீந்தமிழே
எல்லா தேசத்தையும் வளர்த்த தீந்தமிழே
அறிவிப்பு பலகையும் எழுதியது தீந்தமிழே
அரசாங்க தேர்விலும் சான்றிதழ் தீந்தமிழே
தித்திக்கும் சுவைக் குறையாதது தீந்தமிழே
அருந்தமிழ் அருவியாய் கொட்டுவதும் தீந்தமிழே
எண்ணற்ற தலைவரை உருவாக்கியதும் தீந்தமிழே
மரண பலகையிலும் எழுதிய தீந்தமிழே
பிறப்போடு இறப்பிலும் வரும் தீந்தமிழே
வாழ்நாள் சாதனையாக வரும் தீந்தமிழே
எந்நாளும் இன்பமாய் தோன்றிடும் தீந்தமிழே
திக்கெட்டும் ஒளிர்ந்திடும் தேனான தீந்தமிழ்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# கீழடி தமிழரின் மேன்மையடி

வைகை பாயும் பதியாம்
இயற்கை வனப்புமிக்க பதியாம்
தோண்ட தோண்ட கிடைக்கும்
புதைப்பொருட்கள் தமிழரின் வரலாற்றை
மாற்றும் கீழடியின் தொன்மை
கல்லும் மண்ணும் தோன்றும்முன்
தோன்றிய தொன்மைகுடி தமிழ்குடி!
அதற்கு சான்றே கீழடி!
மழைநீர் சேமிப்பு தற்கால
அறிவியல் என்றுகூற வடிகால்கள்
அமைத்து உலகையே வியக்க
செய்தான் கீழடி தமிழன்!
அழகான மண்கலன்கள் அதிலே
தமிழி என்னும் சித்திரங்கள்!
எழுத்தறிவு பெற்ற சமுதாயமாய்
வாழ்ந்தவரே கீழடி மக்கள்
இதுவே தமிழரின் மேன்மையடி!
எழுதுகோலும் உறைகிணறுகள் பலவும்
தமிழரின் தொன்யையை உணர்த்த
அதனை மறைக்கும் மாக்கள் சிலர்
வரலாற்றை மாற்றுமடி கீழடி
இதுவே தமிழரின் மேன்மையடி!




கவிஞர் கோ.பவித்ரா,காஞ்சிபுரம்

# வெற்றிக்கனி

இயல்பாய் இயங்க விரும்புகிறேன்
இமைக்காமல் இம்சிக்கும்
வெற்றிக்கனியை.

இதழ் விரித்து கெஞ்சியது,
இன்பத்திற்க்கு என்றெண்ணிவிட்டாயோ!
இதயத்தின் ஆரவாரத்தை குறைத்து,
சுவாசத்தை சீராக்கவே
திண்டாடுகிறேன்.

கடின உழைப்போடு,
ஒழுக்க நேர்க்கோட்டோடு,
காட்சிகளுடன் கனவு கண்டு,
திட்டப்பணி திடமாக செய்து,
எட்டிப்பிடித்துவிடுவேன்.



கவிஞர் பானு அப்துல்லா

# அடாது

பட்டயங்கள், கேடயங்கள்
தேவையற்றவை
பாதையே முக்கியம்
உள்ளக்கங்கு கனல
உனக்குள்ளொரு வேங்கை பாய்ந்தோட
பள்ளங்களில் தேங்காமல்
முயலும் வள்ளமதை நீ செலுத்து
பாலையில் காயாமல்
பேய் மழையாய் நீ ஊற்று
வலிந்து பெறத்தான் வேண்டும்
வாய்ப்புகள் உருவாக்கத்தான் வேண்டும்
துணிந்து வெல்லத்தான் வேண்டும்
துன்பங்கள் செரிக்கத்தான் வேண்டும்
கண்டும் காணாதார் காணாமல் போகட்டும்
விண்டு போலே விரைந்து செல்லல் வேண்டும்
விண்ணின் மீனாய் ஒளி உமிழ்வாய்
மலரின் செண்டாய் மணங்கமழ்வாய்
அடாது பாடுபடு
விடாதுனை வெற்றி



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# நீ சிரிக்க நான் ரசிக்க

பொக்கவாய் பொன்னம்மா
மனசுக்குள்ள என்னம்மா

பழைய நெனைப்புலதான்
பவுசாத்தான் பாக்குறியே

வெக்கம்தான் வருகுதா
வெடலபுள்ளப் போலவே

ஒடம்புக்குதான் வயசாச்சு
மனதுக்குதான் இல்லையே

ஓடியாடிய பருவம்தான்
ஒளிஞ்சிநின்னு பாக்குதே

மனசுக்குள்ள காதல்தான்
இன்னுந்தான் மாறலையே

தலைமுடி வெள்ளையானாலும்
குறும்புதான் போகலையே

அந்தகாலம் இனிமைதான்
மனசுக்குள்ள நிக்குதே

சந்தோசமா இருந்ததெல்லாம்
மறக்கத்தான் முடியலையே

சண்டைதான் வந்தாலும்
கோவிச்சுகிட்டு போகலியே

பேசாமதான் இருந்தாலும்
சோறாக்கிதான் போட்டியே

மனசு மாறிடத்தான்
கலகலப்பா ஆயிட்டியே

எம்மனசதான் புரிஞ்சிகிட்ட
மதிப்பாத்தான் வச்சிகிட்ட

நீ சிரிக்க
நான் ரசிக்க

மனசுந்தான் ஒண்ணாச்சே
மயங்கிதான் நின்னாச்சே

பாசத்தோட நீயிருந்தே
பக்குவமா நடந்துகிட்ட

ஏமனசுல நீயிருக்க
பத்திரமா பாத்துகிட்டேன்

வீடெல்லாம் சந்தோசமாச்சு
புள்ளகுட்டி பொறந்திருச்சு

தாய்ப்பாலும் நீதந்திட
வாரிசெல்லாம் ஆரோக்கியமாச்சு

விவசாயமும் செழிப்பாச்சி
வயித்துபசியும் போயாச்சு

குடிசையும் குளுமையாச்சி
குறையில்லாம இருந்திடுச்சு

வாலிபத்து நெனைவுதான்
மறக்கத்தான் முடியுமா

சொந்தமாகி வந்தவளே
சொர்க்கமாச்சி வாழ்வும்தான்

எனக்கேத்த பொஞ்சாதியா
கிடைச்சது வரம்தானே.



கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்,விருதுநகர்

# சிந்தியுங்கள் உமக்காக

தீர்க்க முடியாத பிரச்சனை என்று ஒன்றுமில்லை
தீர்வுக்கு பின்னாலே தான் பிரச்சனை என்றது வெளியாகிறது
தீர்வுகள் தேடிய பயணத்தில் அலைச்சல்களும்
அலையா விருந்தாளியாகிறது
ஓய்ந்து போகிறபோது தொய்ந்தும் போகிறோம்
வைத்தியம் ஒன்று  தேவையாகிறபோது
என்னால் முடியும் என்று சொன்ன வைத்தியர்களும்
கடைசி நிமிடத்தில் உமக்கான பொதுவான
கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள்

இது எதற்கு? அவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததாலா
இது வைத்தியத்திற்கான நியதியா? விதியின் சாயலா?
இப்போதெல்லாம் வைத்தியம் மீது அவ நம்பிக்கை உண்டு
தப்பிக்கவே காரணம் உண்டு
குணப்படுத்த வேண்டும் என்பதை தாண்டி
ஆராய்ச்சி என்ற ஈடுபாடு முன்னுரிமையாகிறது
தனது முன்னேற்றத்திற்காக

இதன் அடிப்படையிலே பலரது நோய்கள் பயத்துக்குள் முடங்குகிறது
எத்தனை நாளைக்கு அடக்கி வைக்க முடியும்
அதன் எல்லை தாண்டி கடந்திட முடியாது
என்றதை யார் சொல்வது வைத்தியம் என்றது
மூலப் பொருளாகி விட்டதா
காலம் எதை நோக்கிப் பயணிக்கிறது
நவீனத்துவத்தையா? சாதனங்களின் வளர்ச்சியையா?
மனிதனின் புதிய நடை மாற்றத்தையா?
இப்போதெல்லாம் வயது ஒன்று இல்லை நோய்களுக்கு
காரணம் என்ன பிடிப்படவில்லையா ?
நவீனத்துவத்தை அறிமுகப்படுத்திய மனிதன்
இயற்கை வளங்களின் செழிப்புகளை மறந்து விட்டான்
அதன் போகங்களை பயனுக்கு மட்டுமே எடுத்துக் கொண்டான்



இப்போது எல்லாம் பசிக்கு மட்டும் உணவானது
அதன் தரங்கள் குறைந்து விட்டன
உமக்காக கொஞ்சம் சிந்தியுங்கள்
நல்ல தரமான ஆகாரங்கள் எடுங்கள்
சோர்ந்து கிடக்காதீர்கள்
தனிமையை விரும்பாதீர்கள்
எப்போதும் அழகிய இடத்தை தேர்வு செய்யுங்கள்
நல்ல மனிதர்களை உடனும்
நற்குணத்தோடும் வாழுங்கள்
புலரும் பொழுது நலவாகத்தான் இருக்கிறது
அதை சீற்றமாக மாற்றிக்கொள்வது நாம் தான்
சிந்தியுங்கள் சிறப்பாக
எண்ணங்கள் நலமாக
வளங்களை வளருங்கள் சிறப்பாக

கவிஞர் சஹ்னாஸ் பேகம்,புத்தளம் (இலங்கை)

# தாளாண்மை

1
அம்பலம் ஏற்றிடும்
தன் முயற்சி மட்டும்
வம்பு பேசுவோர்
வாயை அடைத்திடும்

2
கடற்கரையில் உழைப்பாளர் சிலை
உயிர் பெற்றது
பெருத்த ஒலியுடன்
கடற்கரை அதிர்ந்தது

3
துரோணர் கைவிட்டார்;
ஏகலைவன் சோர்ந்தானா
முற்று மனத்துடன்
விற்தொழில் பயின்று தேர்ந்தான்



4
தன்முனை அனுமன்
கடலை மடக்கினான்
தன் பலம் கொண்டே
தொடரல் தாண்டினான்.

5
பட்டம் பறக்கும்
நிலைக்கும் நேர்ச்சி
மாஞ்சா கயிறு
பிடிக்கும் கையின் முயற்சி

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நினைவுகள் போதும்

எதையோ
தேடிக் கொண்டிருந்தேன்
கிடைத்தாய் நீ
இன்பத்தின் வரமாய்

கண்ணீரை மட்டுமே
கண்டிருந்த கண்களுக்குள்
காதலைப் புகுத்தினாய்

தூக்கம் தொலைத்த
இரவுகளுக்கு
இனிய கனவுகளைத் தந்தாய்

தனிமை நேரத்தில்
கதறி அழுத நெஞ்சத்திற்கு
மகிழ்ந்திடும் நினைவுகளைத் தந்தாய்

கடந்த காலத்திலேயே
சிக்கித் தவித்தவளுக்கு
நிகழ்காலத்தை உணர்த்தினாய்

அன்பை யாசித்தே
காத்திருந்தவளுக்கு நீ
திணறத் திணற அன்பு செய்தாய்

எதிர்பார்ப்பில்லாத
உன் நேசத்தால்
எனக்கு எல்லாமுமாய்
ஆனாய் நீ

உன் வருகையால்
மாற்றம் கண்டது
என் மனநிலை
நீடித்திருக்குமா இந்நிலை

நீயே மாறிப்போனாலும்
நினைவுகள் போதும்
நான் வாழ்ந்திட.



கவிஞர் ஜனனி குமார், நாகப்பட்டினம்

# மறந்தாயே

பேரை மறந்தாய்
ஊரை மறந்தான்
மொழியை மறந்தாய்
உன்னையே மறந்தாயே.

உணவை மறந்தாய்
உணர்வை மறந்தாய்
உயிரை மறந்தாய்
உணர்ச்சியை மறந்தாயே.

மழலையை மறந்தாய்
மதிப்பை மறந்தாய்
மண்ணை மறந்தாய்
மனத்தையே மறந்தாயே.

சொல்லை மறந்தாய்
சொந்தத்தை மறந்தாய்
சொர்க்கம் மறந்தாய்
சொக்கிட மறந்தாயே.

இயலை மறந்தாய்
இயற்றிட மறந்தாய்
இசையை மறந்தாய்
இயற்கையை மறந்தாயே.

ஓடை மறந்தாய்
ஓட மறந்தாய்
ஓலைச்சுவடி மறந்தாய்
ஒய்வை மறந்தாயே.

இல்லறம் மறந்தாய்
இன்பம் மறந்தாய்
இசைக்குயில் மறந்தாய்
இன்னுயிர் மறந்தாயே.

விருந்தை மறந்தாய்
வியர்வை மறந்தாய்
விதியை மறந்தாய்
வியப்பையை மறந்தாயே.

பருவம் மறந்தாய்
பக்குவம் மறந்தாய்
பயிற்சி மறந்தாய்
பகலையும் மறந்தாயே.

பள்ளியை மறந்தாய்
படிப்பை மறந்தாய்
பதவியை மறந்தாய்
பசியையும் மறந்தாயே.

உண்மையை மறந்தாய்
உருவத்தை மறந்தாய்
உழைப்பை மறந்தாய்
உலகத்தை மறந்தாயே.

நல்லறம் மறந்தாய்
நலமெல்லாம் மறந்தாய்
நன்மை மறந்தாய்
நன்றியை மறந்தாயே.

தன்னை மறந்தாய்
தாயை மறந்தாய்
தமிழை மறந்தாய்
தகுதியை மறந்தாயே.



கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி,இராணிப்பேட்டை மாவட்டம்

# தீவினை அச்சம்

## அதிகாரம் 21

தீயவினைகளை செய்ய
எதற்கும் அஞ்சாதவர்களே தீயவர்கள்

தீவினையால் மகிழ்ச்சியே என்றாலும்
செய்ய மாட்டார் சான்றோர் பெருமக்கள்

தீயச்செயல்கள் நெருப்பை விட கொடியதனக் கருத வேண்டும்
அஞ்சி நடுங்க வேண்டுமே

தீய செயல்களால் தீமை மட்டுமே விளையுமே

அறிவிலும் முதன்மையான அறிவு
தீமை செய்தவருக்கு அதை திருப்பி செய்யாதிருப்பதே




மற்றோருக்கு கேடு விதைக்க எண்ணாதே
அப்படி நினைத்தால் எனில்
அறமே உனக்கு தீமை உண்டாக்கி விடுமே

வறுமை என்றாலும் தீவினை செய்யாதே
மேலும் வறுமையிலேயே வாடுவாய்

தனக்கு துன்பம் தரும் தீமை என எண்ணுபவன்
பிறருக்கு அத்தீமையைச் செய்யாமல் இருப்பதே நன்று

எக்கொடியப் பகையுடையோரும் தப்பி வாழ முடியுமே
ஆனால் நாம் செய்யும் தீய வினைகள் மட்டும் என்றும்
நம்மைத் தொடரும் நம் நிழல் போல் நம் கர்மா போல்

தன்னலம் பேணுபவன்
தீய செயல்களின் பக்கம் நெருங்க மாட்டார்

தீய செயல்கள் செய்யாமல் வாழ்பவனுக்கருகில்
எந்த கேடும் பக்கத்தில் வராதே!

கவிஞர் சுமதி தசரதன், சென்னை

# மணிமேகலை (ஒன்று)

ஆசிரியர் : மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்

இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் , "மணிமேகலை துறவு"
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனே.

சம்பாபதி என்கிற காவிரிப்பூம்பட்டிணம்
மேரு மலை உச்சியில் தோன்றிய பெருந் தெய்வம்
சூரியனை விட பிரகாசமான் ஒளி பொருந்தியவள்
வரும் துன்பங்களை பனிபோல் நீக்கி காப்பவள்
சீரும் சிறப்புமாக ஊர் மக்களின் காவல் தெய்வம்

நீர் வளம் இல்லையேல் நில வளம் இல்லை
நில வளம் இல்லையேல் மக்கள் வளம் இல்லை
மக்கள் வளம் இல்லையேல் நாடு, நகரம் இல்லை
நீர் இன்றி அமையாது உலகு !

காவிரி தோன்றினாள்
தன் சோழநாடு நீர் வளம் குன்றாதிருக்க வேண்டினான
"என் நாட்டில் வருட முழுதும் ஆற்றில் நீர் ஓட வேண்டும்"
இன்முக்ன் அகத்தியனை தொழுது நின்றான் காந்தமன்
தன் வேண்டுதளுக்கு மனம் இரங்கினான் அகத்தியன்

முனிவர் அகத்தியன் தன் கமண்டல நீரைக் கவிழ்த்தான்
இனி என்ன விடுதலை பெற்ற நீர் பிரவாகமாக ஓடியது
மனிதர் மனம் மகிழ காவிரிப்பாவை தோன்றினாள்
எனினும் நேர் கிழக்காக ஓடினாள் சம்பாபதி நகருக்குள்

அருகே பொங்கும் நீர்பரப்புடைய கடலோடு ஒன்றினாள்
வருக என மக்கள் கொண்டடியது தான் ஆடிப் பெருக்கு
"பருக விண்ணில் இருந்து வந்த ஆகாய கங்கை வாழ்க"
உருகும் உள்ளத்தோடு காவிரியை வரவேற்றாள் சம்பாபதி

நீர் வேட்கையை தீர்க்க வந்த விளக்கே வருக என்றாள்
பார்போற்றும் அவள் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தான்
யார் கேட்டாலும் சொல்வாரகள் அகத்தியர் மா முனிவர்
ஊருக்கே தெரியும் முனியின் கோபதாபம் எப்படி என்று

சோழர்களின் குலக்கொடியாக திகழ்பவள் காவிரி
வாழ்வில் மாறும் பருவங்களில் கோடை நீடித்தாலும்
பாழ்பட்டு வற்றிடாமல் நுங்கும் நுரையுமாக ஓடுவாள்
வாழ்வாதாரம் செழிக்க காவிரித் தாயைக் கொண்டாடினர்

எப்பொழுதும் நீர் சுரக்கும் தண் தமிழப் பாவை காவிரி
அப்பொழுது சம்பாபதி தெய்வம் காவிரிமுன் வந்தாள்
இப்பழம் பெருநகருக்கு "சம்பாபதி" பெயர் வேண்டாம்
எப்பொழுதும் இனி காவிரிப்பூம்பட்டினம் என்பதே நிகர்
( காவிரி புகும் புகார் : பூம் புகார் )



தொடரும்...

கவிஞர் ந.திருக்காமு

# அதற்கு ஒரு பெயர்

நீ நீயாக இருக்க
நான் நானாக இருக்க
நாம் இருவரும் தனித்தனியே
இருந்திருந்தோம் நாமாக!

இருந்தாலும் சரி
இல்லாவிட்டாலும் சரி
இருந்தும் இல்லாமல் போன போதும்
இல்லாமல் இருந்த போதும்
சரியாக வைத்திருந்தோம் அதை!

உன்னுளிருநத நீ என்னையும்
என்னுளிருந்த நான் உன்னையும்
கண்டறிந்திட்டபோதும்
ஒவ்வொரு இமையசைவிலும்
வார்த்தைகள் மட்டுமே
தவமிருந்தன நமக்காக!



எப்படி வந்ததிது
ஏனிங்கு வந்ததிது
தப்பாமல் குறி வைத்து
நம்மைச் வீழ்த்திய அம்பு அது!

சொல்லாமல் பேசாமல் இருந்திருந்தோம்
புரிதலுடன் துவங்கி உருகி இருந்தோம்
நாம் சொல்லிக் கொள்ளாவிட்டாலும்
யாரேனும் வைக்கக்கூடும்
அவரவர்க்கு பிடித்ததுபோல்
அதற்கு ஒரு பெயர்

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# கவியரசு கண்ணதாசன்

தமிழ்க் கவிதைக்கு இலக்கணம் வகுத்திட்ட
தன்னேரு இல்லாக் கவிஞன் - எங்கள்
தகைமைக்கு காட்டாய் விளங்கிய ஆசான்
தன்மானத் தமிழுக்கு நேசனாய் ஆனவன்.

விண்ணே வியக்கும் விந்தைக் கவிகளை
தண்ணீர்ப் போலே தந்தவன் இவனே
மண்ணில் வாழும் மக்கள் மகிழவே.

ஆத்திகக் கருத்தையும் கூட இங்கு
நாத்திகரும் எற்கும் வகையில் சொன்னவன்
சூத்திரரும் கற்கும் வகையில் நல்ல
வேத மந்திரங்களை எளிமையாகச் கற்பித்தவன்.



மதமென்பது யானைக்கு பிடிக்கும் மதமல்ல
மனித வாழ்வை வரையறுக்கும் கருவியென
இதமாகச் சொல்லிடவே இயற்றினான் காவியம்
அர்த்தமுள்ள இந்து மதமெனும் பெயரிலே.

தொடாத தலைப்பு இல்லை கவிதைகளில்
விடாத கருத்துகள் இல்லை கட்டுரைகளில்
படாத பழிகள் இல்லை வாழ்வில்
அதனாலே பாடமாய் அமைந்தான் நமக்கெல்லாம்.

அரசியல் அரங்கில் அவனோர் நட்சத்திரம்
திரைப்பட உலகில் இவனோர் இமயம்
இலக்கிய புலத்தில் இன்றும் போற்றப்படுபவன்
தமிழர் நெஞ்சங்களில் என்றும் வாழ்பவன்.

கவிஞர் செங்குட்டுவன், ஊத்தங்கரை

# வாழ்ந்திடு

படபடவென பறந்தோடும் மனிதா
பறந்தோடி பரிசா பெறபோகிறாய்
பக்கத்திலுள்ளோர் பாராமலே
பந்தயக்குதிரையாக ஓடுவது ஏனோ?
பகட்டுவாழ்வை நோக்கி ஓடும் நீயும்
பதறிய ஓட்டமும் எதற்காகவோ?
பணமே பலமென்று நீயுமே
பதவிக்கும் துரோகம் செய்கிறாயே
படிபடியாக முன்னேறாமலே
படாரென ஏறிட நினைப்பது ஏனோ?
பள்ளமேடு பாராமலே
பந்தய வாழ்வை ஏன் நடத்துகிறாய்
பண்பாட்டையும் மறந்திட்டே
படாதபாடு படுத்துகிறாயே
பழியுணர்ச்சியால் பாழாகிறாயே
பழம்பெருமை மறந்திட்டாயே
பழங்கதையானாயே
பளிங்குபோல பளபளப்பானதையுமே
பல் பிடித்து பதம் பார்க்கிறாயே
பணிவென்பதையும் மீறி
பராரியாக அலைகிறாயே
படோட வாழ்வுதான் உன் குறியா
பகடியாகிடுமே உன் வாழ்வுமே
பட்டிதொட்டியிலும் வாழ்ந்திடும் மனிதம்
பங்களாவில் இல்லாததும் ஏனோ?
படைத்தவனையும் நினையாமல்
பயமுமில்லாமலே பறந்து ஓடுகிறாயே
பலபரீட்சையில் மாட்டிடுவாயே
பலவீனமும் அடைந்திடுவாயே
பத்துமாதம் சுமந்தவளையும் மறக்கலாமா?
பத்திரமாய் காத்தவரையும் ஒதுக்கலாமா?
பதியாக வந்தவளையும் விலக்கலாமா?
பவித்ரமான வாழ்வு இதுவே
பச்சாதாபத்தோடு வாழ்ந்திடு.



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# என்னவளே பரிதாபத்தில் உன்னவன்

ஏக்கங்களுடன் எழுந்த எழுபது கடிதங்களோடு
முகமறியா என்னவளுக்காய் முகங்கழுவி பிராத்தனை செய்து
முழுவதும் என்னை ஒப்படைக்க ஒப்பந்தக்காரன்
நான் தயார். உரிவளோ எங்கே.
காத்திருப்பின் வாசலில் யாசகனாய் என்றும்
கவிதைகள் ஆயிரம் கண்ணீராய் வடித்து
காருண்ய மனம் கடனுக்கு வாங்கி
காவியத்தலைவியாய் என்னவளை எண்ணி
காதல் இசைகள் கமல வலம்வந்து
என் கூட்டுக்குடும்பத்தின் ஆத்ம அரசியை அழைக்கிறேன்.
கடிதங்கள் தோறும் காதலும் கண்ணீரும்
வருடங்கள் முடிந்தும் வதனம் அறியேன்.
காத்திருந்து பழக்கப்பட்டதால் காத்திருக்க வைக்கிறாள்.
இனிமேல் கத்தித்தான் அழைப்பேன் காருண்யம்காட்டு.



கவிஞர் சாதீக்க பாத்திமா சம்ஹா,மூதூர்(இலங்கை)

# அன்னைத்தமிழே

அடி முடி காணா
ஆதிசிவனாய்
உன் ஆதிஅந்தம் கண்டோர்
எவரும் உண்டோ?

சங்க இலக்கியமாய்
சிந்தையினை மகிழ்வித்தாய்

நெறி பிறழாமல்
நீதியும் நீ நவின்றாயே

மாசில் வீணையில்
இறையெனவே உறைந்திட்டாய்

தன்னிகரில்லா தலைவியென
காப்பியத்தில் ஒளிர்ந்திட்டாய்

நெஞ்சு தனை கொள்ளைகொள்ள
சிற்றிலக்கியத் தேரிலே உலா வந்தாய்

பிறப்பொக்கும் எல்லா உயிரும் என்று
பொதுமை பேசினாலும்
என்று பிறந்தாய் என
உரைத்தாயில்லை

கல்லையும் மண்ணையும்
அகழ்ந்து செல்ல அகப்பட்டதோ
என் தொன்மொழியின் எச்சங்கள்



கடல் கொண்ட
குமரிகண்டத்தின் மிச்சங்களாய்

பழமைக்கு பழமை பேசி
புதுமைக்கு புத்தொளி வீசி
காலவெள்ளத்தில் கரைசேர்ந்த
வெண்சங்காய்
முச்சங்கங்கள் முற்றும் ஆய்ந்த
தென் அன்னைத்தமிழே

முக்கனியின் சுவையாய்
தித்திக்கும் முத்தமிழே

எனையாளும் என் அன்னைத்தமிழே!

கவிஞர் கீர்த்தனா பு,உதவிப் பேராசிரியர்

# கலங்காதிரு!

கலக்கிட மனிதர்கள் இறங்காதவரை
கலைத்திடக் காற்று வீசாதவரை
குளத்தில் பிம்பங்கள்
குலையாமல் நின்றிருக்கும்!

கலங்காத மனத்துள்ளே
களங்கம் புகாதவரை
உருப்பெறும் எண்ணங்கள்
உயர்ந்து நிற்கும்
கோபுரம்போல்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# காத்திருக்கும் கவலைகள்

மீன் பிடிக்கப்
போகையில சொல்லிப்போட்டு
போன மச்சான்
தரையில எறங்கலயே
தவிக்கிறேனே கரையிலேயே



நீலக்கடலின் அலையினிலே
நீளமான படகினிலை
நீர்கிழித்தே வாழ்க்கையின்
நீளங்களை சரியாக்கிடவே

பயணம் செஞ்ச
பஞ்ச கச்சங்கட்டிய
பருவ மச்சானே
பக்கத்திலே வந்திடவே
பக்குவமா காத்திருக்கேனே.

கொண்டு வரும்
கொளவா மீனின்
கொசவுத் துள்ளலிலே
கொறயவா போறேனோ?

சஞ்சலத்தின் சலனத்தல
சடங்கா தூக்குற
சல்லிடை வலையிலே
சமைஞ்சே கெடக்குறேனே.

மாயவனின் வரவை
மாலுமியின் நடையை
மானாவாரியா பாத்திடவே
மான்விழியாள் காத்திருக்கேனே.

நெஞ்சமெல்லாம் பூத்திருக்கேனே
நெடிய வாடை
நெருங்கிடச் சொல்ல
நெற்றியில முத்தமிடவாடா.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# பறவையும் வானமும்

கீச்கீச்சென்ற பேச்சுகள்
இலையைத் தழுவும் காற்றின் கைகள்
கிளைக்குக் கிளை
பறவையின் தேடல்கள்
அமர்ந்த மரங்களின் இன்றும் நேற்றும்
அதேபோல இருப்பதில்லை
வானத்தை அளந்துவிட்ட
பறவைகளின் இருத்தலும்
ஒத்திருப்பதில்லை.
ஓயாது பிதற்றும் இந்த மனதில்
ஒட்டிக்கொள்வதில்லை
கிளையின் நிம்மதியும்
பறவையின் வானமும்.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# தொலைதூர இரசனையின் பார்வையில்

வனிதை வாதையாய்
தாழ்வு அகத்தோடு விலகிய
பாதங்களில் கதவோடும் வதனம் மறைக்க.

என்னவோ அவனுக்கு மட்டும்
ஏதென புலப்பட்டாளோ !
தாரகன் அவள் இப்படி அப்படியென
புகழாரம் பாடவுமில்லை.
செவியோரம் மூச்சும்
தீண்டிடவுமில்லை.

தொலைவோடு நிலவாய்
நெடுக ஓடும் தண்டவாளமாய்
மலை முகடின் உச்சி போல
நெடு தொலைவிலேயே
பார்வைகளால் பரிதவித்தன
அகத்தின் பேராந்தம்
இத்துனை அருகிருக்க வாய்ப்பேதடா.



எட்ட நின்று இரசித்தலின்
இரகசியம் அறிவீரோ!
அகம் பிழந்திட
பறந்திடும் வண்ணப்பூச்சி போல
சிறிடித்தனவாம் சித்தரம் தீட்டிய
கற்பனையின் காதலில்.

அருகே
அவனும் இல்லை.
அவளும் இல்லை.
ஆயினும் வாழ்கிறார்களே
காதலெனும் உணர்வில்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# அம்மா

குழந்தையின் அழுகுறலுக்கு
அர்த்தம் தெரிந்த
அகராதி
அம்மா தான்
கடல் ஆழத்துறக்கு
முடிவுரை எல்லையுண்டு
மலை உயர்த்துக்கும்
அளவிடம் எல்லையுண்டு
அம்மாவின்
அன்பு.
மதலும் முடிவும் அந்த
சுழல் அன்பு



கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

# மருதை

மாற்றமே மாறுபட்டது ஊரும் தோற்றம் பெற்றது
அலைபேசியில் தொலைந்து போன
அங்கமில்லா சிங்க அரவனே
அரைநொடி அன்பு இல்லை
பேரின்ப சிறப்பே உன் பெயரின் பிறப்பே
முகம் காட்டும் தலைக்கனம் தன்னலமில்லை
பொதுநலம் புன்னகை புண்பட்ட புறப்பொருள்.
போகும் போர்க்களமே நீயே வாகனமே
வலுவிழந்த தலையும் வான் முட்டும்
வண்ணமில்லா புன்னகை மெய் தீட்டும்
உன்னை வரிகளில் தீட்ட உன் ஊரில் ஒருவனே
மெய் எழுத்தனாக மெய்ப்பட உரைத்தேனே ஊரை
தினசரி செய்தித்தாள் நீயென்னும் தீட்டி
பற்றி எரிந்து கொண்டிருக்கிறது
முகநூலில் மூச்சு விட முடியாமல்
அதை முகம் அறியும்
ஒருநாள் உலகம் அறியும் !



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# எல்லைச்சாமி

என்னவன்
என்னுயிராய்
என்னுள்
எப்போதும்
எனக்காக
எல்லைச்சாமியாய்
நிற்பான்.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# மனம் மறக்கா வசந்த காலங்கள்

மாற்றம் என்ற சொல் மட்டும் மாறாமல்
மாற்றியது வாழ்வில் மற்றதை எல்லாம்.
மாற்றம் என்ற முதலையின் வாயில் சிக்கி
சிதைந்து மனம் மாறா வசந்த காலங்கள்.

கைகடிகாரம் மாட்டி விட்டு கன்னத்தில்
கொசுறு தந்த குச்சி மிட்டாய் தாத்தா.
டிங் டிங் மணி சத்தத்தில் காண்டா விளக்கு
வெளிச்சத்தில் கடக்கும் பஞ்சு மிட்டாய் வண்டி.



கூண்டு வண்டி ஒலிபெருக்கி சத்தத்தில்
வரும் சினிமா கொட்டகையின் விளம்பரம்.
திருவிழா காலக் கோவில்களில் போட்ட
நாடக கோமாளிகளின் நகைச்சுவை பேச்சு.

மிதிவண்டி மூட்டை துணிக்காரரிடம்
தவணையில் வாங்கிய பொங்கல் புத்தாடை.
மாட்டுப் பொங்கல் பண்டிகையில்
கட்டை வண்டி பயணத்தில் இட்ட கூச்சல்.

அம்மாவுடன் சென்ற பேருந்து பயணத்தில்
பின்னோக்கி சென்ற மரங்களின் ஓட்டம்.
விடுமுறை முடிந்து வீடு திரும்பும்போது
மாமா வாங்கி தந்த புத்தாடை தந்த உற்சாகம்.

வெளியூர் பயணத்தில் பார்த்து வந்த சினிமாவின்
வாய்பிளக்க வைக்கும் நண்பனின் கதைசொல்லல்.
தொலைக்காட்சி பெட்டி வீட்டில் சன்னல் வழிப்பார்த்த
வார இறுதி நாட்களின் மகாபாரதத் தொடர்.

பள்ளியில் எடுக்கும் புகைப்படத்திற்கு
அழுது வாங்கி சென்ற அப்பாவின் கைக்கடிகாரம்.
எத்தனை எத்தனை நிகழ்வுகள் இப்படி
அத்தனையும் நித்திரையில் காணும் கனவாய் போனது.

கவிஞர் ஆனந்த் குவை.ஜெயராமன்,சேத்தியாத்தோப்பு

# தஞ்சை!

நெல் விதைத்த விவசாயின் காலடியும்
நெல்லை மிதித்த ஆனை ஆனை காலடியும்
இளம் கலைஞர்களின் குரலடியும் ஓங்கி ஒலிக்கும் தஞ்சை!
இது மாலையில் நாதஸ்வரம் ஒலிக்கும் பெரு தஞ்சை.

நீண்டு கிடக்கும் வீதிகளும்
வீதிக்கொரு பெயர்களும்
பல கலைஞர்கள் வாழும் பெருதஞ்சை !
நீண்டு நிற்கும் தஞ்சை
பெரிய கோவில் கொண்ட பெரும் தஞ்சை!
சிறு தொண்டாய் தயிர் கொடுத்த
கிழவியின் திருவடியின் நிழலில்
பெரும் ஈசன் வாழ்ந்து வருவதால்
இது நன்றி மறவா பெருதஞ்சை!
நற்பெருமை பல கொண்ட பொன் தஞ்சை!



சோழன் நீதி பிழறமால் நல்லாட்சி புரிந்ததனால்
நல்லாட்சி ஈசன் புரிந்து வரும் பெரும் தஞ்சை!
நற்பேறு கொண்ட நல் தஞ்சை.

தமிழை குடித்தே காவிரி ஓடுவதால்
தங்க தமிழ் நான் வளர்ப்பேன் என்றே சபதமிட்டதனால்!
விவசாயிகள் பல பயிர்களை காத்து வளர்த்ததனால்!
பெரும் வயல்கள் சூழ்ந்த வள தஞ்சை!
சோர்விலா சோழப்பேரசும்,
நீதி தவறா நாயக்கர்களும்,
மயங்கிடாத முத்தரையரும்,
மண் ஆசை வளர்த்த அந்நியரும்,
அந்த அந்நியரில் சில கண்ணியரும்,
ஆட்சி புரிந்த தஞ்சை பெரிய கோயில்
கொண்ட பெரும் தஞ்சை !

மண்ணை திருட வந்தவரை
தம் வயிற்றுப் பசிக்கு வந்தவரை
செம்பொன்னை திருடி போன வரை
பொசுக்கி போக வந்தவரை
தன் பொறுமையினால் காத்த பெரு தஞ்சை.

தன் அரண்மைக்காய்சோழப்பேரசு கட்டியதும்
நாயக்கரால் புதுப்பொலிவு பெற்றதால்
இரண்டாம் சரபோஜி மன்னர்
தம் அறிவை வளர்க்க ஆசைப்பட்டு
பல நூல்கள் அதனுள் வைத்ததனால்
அறிவு மிகுந்த பெரு நூலகம் அதனை கொண்டதால்
பெருமை கொண்ட பெரும் தஞ்சை.

நெஞ்சு வறண்டு போனதால் நயவஞ்சகர்கள்
தண்ணீர் தர மறுத்ததனால்
பஞ்சம் பிழைக்க வந்தோர்
நதியை பங்கு போட்டுக் கொண்டதனால்
தன் பொன் முகத்தை இழந்த பொன் தஞ்சை
தன் இயல்பாய் மிளிரும் பொன் தஞ்சை!

கவிஞர் தினேஷ் கண்ணா

# பிறன்கேடு சூழேல்

அன்பான இல்வாழ்க்கை  என்றும் நன்று
பண்போடு வாழ்ந்திடுவோம் வென்று
உள்ளம் உடைமையில் உயர்வை உள்ளுவோம்,
கள்ளம் கடமையில் வருவதைத் தள்ளுவோம்
கோடிநாள் வாழ்வதல்ல வாழ்க்கை.
கோடி நெஞ்சங்களில் வாழ்வதே வாழ்க்கை
நாடிப் போற்றினாலும் அழிவுறுமே யாக்கை
அடக்கி ஆள வேண்டும் நாக்கை
கட்டிக் காக்கவேண்டும் அதன் போக்கை
நல்லவே என்றும் எவர்க்கும் ஆற்றுவோம்
அல்லவை நீக்கியே அனைவரையும் போற்றுவோம்.
மறந்தும்  பிறன்கேடு என்றும் சூழேல்
அறம் நீங்கிய துன்பத்தால் ஆழேல்.
நிகழ்கால வாழ்வில் இன்னல் விதைப்பானே
எதிர்கால அறுவடையாய் தீவினையை அறுப்பானே



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# என் யாக்கை

எத்துனை பிறவியாகினும்
என் விருப்பம் நீயடா.
உனக்காக பிறப்பெடுத்தே
வல்லின காதலாய் விழி முன்னே.

நிலவும் விடை தேடுதடா
காதலில் கரைந்தவள்
பொய்கையில் கலந்தாளோ என

பிறையும் அறியே!
யான் நின் அகத்தில் கலந்தவளானதால்,
புறம் தேடி என் பயனோ.



பாவம் அவன் களைத்தானோ!
துயில் கொண்டான்
பரிதியின் பணி துவங்கிடவே.

எனக்காக பிறந்தாயே எனதழகா!
பிழையோடு கவி பதிக்க பிடித்தமாய்
நின் நினைவுகளில் நானும்.
என்னோடு யாக்கையாய் நீயும்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# அறிவியல் தமிழால் அகிலம் அளப்போம்

தங்கத் தமிழால் தரணியை அளப்போம்
பைந்தமிழால் பாரினை அளப்போம்
உன்னதத் தமிழால் உலகினை அளப்போம
அழகுத் தமிழால் அகிலத்தை அளப்போம்.

புதுத் தமிழால் புவியை அளப்போம்
பூத் தமிழால் பூமியை அளப்போம்.
ஞானத் தமிழால் ஞாலத்தை அளப்போம்
உலகறிந்த தமிழால் உகத்தினையே அளப்போம்.

குன்றாத் தமிழால் குவவை அளப்போம்
புன்னகைத் தமிழால் புடவி யளப்போம்
பொருண்மைத் தமிழால் பொறை யளப்போம்.
கிட்டிய தமிழால் கிடக்கை அளப்போம்.

மழலைத் தமிழால் மண்ணகம் அளப்போம்
வஞ்சித் தமிழால் வையகம் அளப்போம்.
குறவஞ்சித் தமிழால் குவலயம் அளப்போம்
பொறுமைத் தமிழால் பொழிலை அளப்போம்.




பூசித்த தமிழால் பூழிலை அளப்போம்
நீண்ட தமிழால் நீரகம் அளப்போம்.
மங்காத் தமிழால் மண்ணுலகை அளப்போம்
இன்னிசைத் தமிழால் இருநிலம் அளப்போம்.

மேன்மைத் தமிழால் மேதினி அளப்போம்
அன்புத் தமிழால் அவனியை அளப்போம்.
கன்னித் தமிழால் காசினி அளப்போம்
அறிவியல் தமிழால் அகிலத்தையும் அளப்போம் நாமுமே.

கவிஞர் இரா. கோமதி,பொள்ளாச்சி

# உயிராகி மெய்யாகி உறவாடும் தமிழ்

அன்னை மொழியாம்
ஆதி மொழியாம்!
அகிலத் தமிழரின்
அருமை விழியாம்!
முன்னைய குலமாம்
மூத்த குடியாம்!
மூத்த தமிழின்
மகத்தான முகிழ்ப்பாம்!
***

ஆதி சிவனாரின்
அகக்கண் என்போம்!
அகத்திய முனிவரின்
முகக்கண்ணாய் மொழிவோம்!
பொதிகை மலையே
பூர்வீக உதிப்பே!
புவனத்தில் உனக்கே
முதல்நிலை மதிப்பே!
***



தந்தையைத் தாயைத்
தந்ததும் தமிழல்லோ!
தரணி மொழிகளுக்கும்
தாயே இதுவல்லோ!
சிந்தையில் உயிரான
செம்மொழியை மறப்பதோ!
செவ்வாய் கோளிலும்
சீவிக்க வைப்போமே!
***

என்னையும் உன்னையும்
ஈந்ததும் இத்தாயே!
என்பாய் நரம்பாய்
இருப்பதும் இத்தமிழே!
கன்னல் மொழியான
கவின்மொழி இதுவே!
கண்ணாகக் காக்கும்
கடமை நமதே!
***

உயிராகி மெய்யாகி
உறவாடும் தமிழே!
உடலிலே உயிராகி
ஒலிப்பதும் நீயே!
தயிரிலே வெண்ணையாய்
தித்திக்கும் அமுதமே!
தரணியில் தாரகை
தினமும்நீ அன்னையே!
***

முருகனின் உருவாய்
முன்நிற்கும் தமிழே!
முருகியல் மொழியாய்
மிளிர்வது அழகே!
அருந்தமிழே முத்தமிழே
அருவியாய் இத்தமிழே!
அகிலத்தின் அச்சாணியே
அழியாதே இன்னுயிரே!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், இலங்கை

# பச்சை நிறமே

அதிகாலை நேரத்தில்
ஜன்னலின் ஓரத்தில்
ஒரு குவளை தேநீருடன்
கண்டகாட்சிகள் யாவும் பச்சைநிறமே.

மரக்கிளையின் நடுவிலே
காகங்கள் கரைந்திடும்
குயில் ஒன்று கூவிடும்
அணில்கள் இரண்டு ஓடிடும்
பச்சைகிளி பறந்திடும்.



ஆரவாரம் இல்லா அமைதியிலே
அழகான பச்சை நிறம் கண்ணிலே
அத்தனையும் ரசிப்பேன்
அருந்தும் தேநீர் தீரும் வரை
தெரிவதில்லை என் நாவினிலே.

கண்ணுக்கு விருந்தாகும்
மனதிற்க்கு மருந்தாகும்
உணர்வுக்கு உறவாகும்
உடலுக்கு நலமாகும்
பச்சைநிறமே.

கதவு தாழ் திறந்ததும்
காண்பெதெல்லாம் உன் முகமே
வாசலின் முற்றத்தில் சில செடி,கொடிகள் வைத்து
உயிராய் காத்திடுவேன்
உன் நிறம் வாடினால் போதும்
என் மனமும் வாடிவிடும் இந்த
பச்சை நிறமே.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# தமிழ் மொழி

மனிதம் போற்றும் வாழ்வுக்கும்
அன்பு மட்டும் போதுமே
அன்பான வாழ்வுக்கு நேசம் பாசம் போதுமே
உயிர்கள் போற்றும் இதயத்தை
உயர்வாய் மதிக்கும் மனிதனை
வானமே எல்லையாய் உதவியே
கொள்கையாய் வாழும் மனிதன் தெய்வமே
உயிராய் மதிக்கும் மொழி கூட
விழியாய் போற்றும் மனம் வேண்டும்
தாய்மொழி எந்தன்உயிர்மெய் ஆகுமே
தமிழ் மொழியே தாய் மொழியாய் கொண்டு
வாழும் வளர்க்கும் பண்பினால்
தரணியையும்ஆளப்போகும்
தமிழ் மொழியின் காலம் இது
தமிழை வளர்க்க தன்னையே தந்த
அறிஞர்கள் உதித்திட்ட புண்ணிய தமிழ்நாட்டில்
வானமும் பூமியும் உலகில் கடைசி தமிழன் உள்ளவரை
கோலாச்சும் நம்மொழி கொண்டாடுவோம் தமிழ் மொழி



கவிஞர் ஜேப்பி.பன்னீர்செல்வம்,சேத்தியாத்தோப்பு

# திட்ட விடுமுறை

மூளையின்
எழுதுகோல்களுக்கு
மை உற்றாதீர்கள்
ஒவ்வொரு நாளும்
நிகழ்வுகளின்
தொடர் ஓட்டத்திற்கு
அட்டவணை போடும்
கடும் ஆலோசனைகள்
எழுதப்படாமல்
எண்ணங்கள் அற்ற
மூளை
பூந்தோட்டம்
செல்லட்டும்
ஆதி மூளை
கொண்ட
படைப்பின்
முதல் நாள்
திட்ட விடுமுறையோடு
தயாராகட்டும்
நாம் தொடாத
அடுத்த நொடி
சுவாரசியங்களை
எதிர்கொள்ள



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# தோட்டத்து பூக்கள்



கண்விழித்து காலையிலே
பின்பக்கம் போவதுபோல்

வண்ண வண்ண பூக்களது
கண் பார்த்து கண்ணடிக்கும்

காலை பனித்துளி இதழ்வழி விழிந்திட
மெல்ல காற்றிலாடி மேனி சிலிர்திருக்கும்

செல்ல கதிரவன் பொன்னுடல் தொடுகையில்
பெண்ணுடல் போலது மெல்ல சிவந்திருக்கும்

நாளதன் பணியினில் நானும் கரைந்தாலும்
அருப காதலியாய் மணம் வீசி
மனதில் சுகம் பேசிருக்கும்

மாலையில் காணும்போது வாடியே இருந்தாலும்
சோகங்கள் ஏதுமின்றி தயாராகும் தோட்டத்து பூக்கள்

மறுநாள் மனதிற்கு மகிழ்வுதர.

கவிஞர் மு.சரவணன்,மயிலாடுதுறை

# உலகம் ஆயிரம் சொல்லட்டுமே

உழைப்பவரை பார்த்து ஊதாரிக் கூட்டமொன்று
ஆயிரம் வார்த்தைகள் கூறிடும் ஆனபயன்தான் என்ன?
குரைக்கின்ற நாய்க்கு காரணம் வேண்டுமா?
தன்நிழல் பார்த்து தானே குரைக்கும்.
வென்றவனை ஆதரிக்கும் காலமும் உலகமும்.
தோற்றவனையும் அவனின் காரணத்தையும் நிராகரிக்கும்.
ஓடுகின்ற நதிகள்தான் ஊற்றெடுக்கும் ஏரியாய்.
வளைவுகளை கடந்துதான் வளைசேரும் வரலாறாகும்.
கபடகாரரின் காவாயின் வார்த்தையில் தேங்கினால்.
நாற்றம்தரும் காவாயாய் மாறிடும் வாழ்கை.
ஓடுகின்ற வழியில் ஆயிரம் தடைகள்.
பார்வையாளர் வாயே அடிக்கின்ற பறைகள்.
விமர்சனம் வருகையில் வெற்றியும் நெருங்கிடும்.
இருப்பதோ இறுதிப்படி எடுத்துவை அடுத்தடி.
கிடைத்திடும் வெற்றிப்படி பிறர்வாயில் கைவைக்கும்படி.
வென்றிடு வேடிக்கை பார்க்கும்படி பின்வருகின்ற.
முயற்சிக்கு ஏணிப்படி கொடுத்திடு நீவாழ்ந்தபடி.



கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# வாழ்வே இனிது

இனி மெல்ல வாடும்.
இந்த,
பனி விலகிய காலம்.
இரக்கமற்று,
சுட்டெரிக்கும் கோடை வெப்பம்.
வாழ்க்கை போராட்டத்தை
எவ்வித சலனமின்றி
போதித்த வண்ணம் நிற்கும்
அந்த மரத்தின் நிழல்!



கவிஞர் அ.செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# மாலவனும் வைணவமும் பகுதி 22

## பெரியாழ்வார் தொடர்ச்சி -5

எரியாழ்வார் திருமொழியில் இரண்டாவது பத்தினிலே
ஒன்றாவது அமைந்ததுவே அப்பூச்சி காட்டலதே!
முதலொன்பது கலித்தாழிசை ஈற்றுபத்தோ தரவைந்த
கொச்சகஞ்சார் கலிப்பாவே! பந்துவரா ளிராகத்து
ரூபகப்பேர் தாளமதோ மிக்கின்பம் பயன்தருமே!
இரண்டாவது திருமொழியோ அம்மப்பேர் பருவமதே!
தாய்ப்பாலைப் பருகிடவே அழைத்திடுதல் என்பதாமே!
பதினொன்றும் கலிவிருத்தம் வகையமைப்பு! புன்னாக
வராளிப்பேர் ராகமதில் ரூபஞ்சேர் தாளமது
நல்லினிமை சேர்த்திடுமே! பாடற்கியை புபண்ணாகும்!
மூன்றாவது திருமொழியோ காதுகுத்தல் பருவத்தே
பனிரெண்டு திருநாமம் உணர்த்துவதாம்! எழுசீர்கொள்
கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாமே! அசாவேரி
ராகஞ்சார் ஆதிதாளம் நல்லினிமைக் கூட்டிடுமே!
நான்காவது திருமொழியோ நீராட அழைப்பதுவே!
அறுசீர்கொள் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாமே!
பிலஹரிப்பேர் ராகத்தில் ஜம்பைபேர் தாளத்தால்
நல்லினிமைக் கூட்டிடுமே! ஐந்தாவது திருமொழியோ
கேசத்தை வாருதற்கு காக்கையை அழைத்தலாமே!
முதலொன்பது கலித்தாழிசை ஈற்றொன்று தரவென்னும்
கொச்சகத்துக் கலிப்பாவே! மத்யமாவதி ராகத்தில்
ரூபகப்பேர் தாளமதில் செவிக்கின்பம் சேர்த்திடுமெ!
ஆறவது திருமொழியோ, கோல்கொணர காக்கையை
வேண்டுவதாம்! முதல்பத்து முன்னொன்பது கலித்தாழிசை
ஈற்றொன்று தரவுகொச்சகக் கலிப்பாவே! தேசீய
ராகமதில் ஆதிதாளம் தேன்பாயும் காதினிலே!
பெரியாழ்வார் தொடர்ச்சியது மேலுமுளது! சுவைப்போமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# காதலுக்குள்ளே

வெண்மதியும் பேசுமோ
வெட்கமோடு என்னிடம்
பெண்ணான தன்னிடமோ
பேரன்பும் கொண்டு
கண்களிலே விந்தையோடும்
கண்ணோட்டத்தை அறிந்திடுமோ
மண்ணிலே எப்போதும்
மௌனமே கண்டிட

சினமதை மறந்து
சிறப்பும் பெற்றாலே
மனதில் உருவாகும்
மாற்றங்கள் அதனாலே
தினமும் நடக்கும்
தித்திக்கும் செயலாலே
மானமோடு மதிப்போடு
மாநிலத்தில் வாழ்ந்தாலே




தேடல் என்றொரு
தொடக்கமும் கிடைக்க
ஊடல் உணர்தலும்
உண்மையே சொல்ல
வாடலோ இல்லையடி
வாழ்நாள் முழுவதும்
பாடியே மகிழ்ந்தால்
பரவசமாகலாம் காதலுக்குள்ளே

கவிஞர் ப.வெங்கட்ரமணன்,குளித்தலை

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -23 பயணச் சீட்டு



டாக்ஸி டிரைவருக்கு ஆங்கிலத்தில் எவ்வளவு பணம் என்று கேட்டு வாடகை தந்து விட்டு பெட்டியை எடுத்துக் கொண்டு தாதர் ஸ்டேஷனுக்குள் நுழைந்தாள் புவனா.

அருகில் நின்ற டிக்கெட் பரிசோதகரிடம் மும்பை நாகர் கோவில் எக்ஸ் பிரஸ் எந்தப் ப்ளாட் பாரத்திலிருந்து புறப்படும் என்று கேட்டுக் கொண்டு மூன்றாவது ப்ளாட்பாரத்திற்கு புவனா வந்த போது மும்பை நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் வந்து நின்றது.

எல்லோரும் தங்களுடைய பயணச் சீட்டுகளை சரிபார்த்துக் கொண்டு அவரவர் இருக்கைகளின் மேலேயும் கீழேயும் கொண்டு வந்த பைகளையும் வைத்து விட்டு பயணத்திற்கு தயராகிக் கொண்டிருந்தார்கள்.

புவனா எஸ் மூன்றாவது பெட்டியைத் தேடி அதில் பதின்மூன்றாம் எண் இருக்கையில் அமர்ந்தாள். ஜன்னல் வழியாக சிவா வருகிறானா என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

அருகிலிருந்த பெண்மணி "எந்த ஊருக்குப் போகிறாய்?" என்று கேட்டாள்.

"திருநெல்வேலிக்கு" என்றாள்.

"தனியாகவா பயணம் செய்யப் போகிறாய்?"

"ஆம்" என்று பதிலளித்த போது சிவா அங்கு வந்து சேர்ந்தான்

அருகில் வந்த சிவா "துணி எடுப்பதற்கு கொஞ்சம் லேட்டாகி விட்டது. இந்தா இதில் கொஞ்சம் துணிமணிகளும் ஐந்து சேலைகளும் வாங்கி வைத்திருக்கிறேன். கொஞ்சம் மிட்டாயும் வாங்கி வைத்திருக்கிறேன்." என்று பைகளை நீட்டினான்.

வாங்கி தன் இருப்பிடத்தில் கொண்டு வைத்து விட்டு திரும்ப கதவருகில் வந்து நின்று கொண்டாள். என்ன பேசுவது என்று புரிய வில்லை. இவனிடம் ஏதாவது பேசி அழுது விடுவோமோ என்று பயந்து போய் அமைதியாக நின்றிருந்தாள்.

"போவது என்று முடிவாகி விட்டது. ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தாகி விட்டது. தனியாகப் போகிறோமே என்று வருத்தமில்லையா புவனா?"

"……. " பதில் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரஜகை நிலவன்

அத்தியாயம் -23 பயணச் சீட்டு

"என்னைக் குறை சொன்னாய் பரவாயில்லை. நான் இனி தனியாக கஷ்டப்பட போகிறேன் என்று யோசித்து பார்த்தாயா புவனா"

"…….."பதில் சொல்லாமல் அழ ஆரம்பித்தாள்

"ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு சாப்பாட்டுக்கு என்ன செய்வது? வியாபாரத்திற்கு போவதா? இல்லை திவ்யாவை கவனித்துக்கொள்வதா என்று திணறிக் கொண்டிருந்தால் தான் உன்னை எனக்கு மணம் முடித்து வைத்தார்கள்"

"ஆனால் அத்தான் என்னாலே ஒரு சின்னக் குழந்தையைக் கூட ஜெயிக்க முடியவில்லை எனும்போது, நான் இங்கு வாழும் வாழ்க்கைக்கு அர்த்தமில்லாமல் போய்விடாதா?"

"திவ்யா உன்னை அம்மா என்று கூப்பிட வில்லை. நான் வருத்தப்படுகிறேன். ஆனால் உனக்கு என் மேல் பாசமில்லையா? நான் தனியாளாகிப் போவேன் என்று புரியவில்லையா?"

"………" மௌனமாக வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள் புவனா.

ரயில் புறப்படுவதற்காக பச்சைக் கொடி காட்டப் பட, பின்னால் நின்றிருந்த ரயில்வே கார்டு விசிலடித்தார். இரயில்வே எஞ்சின் புகை எழுப்பி புறப்பட தயாரானது.

"நீ திவ்யா அம்மா என்று உன்னை அழைக்கவில்லை என்ற கோபத்தில் புறப்பட்டு விட்டாய் உனக்கு இந்த சிவா அத்தான் இனி எத்தனை கஷ்டப்படுவார் என்ற யோசனை எழாமலிருந்தது ஆச்சரியமாக இருக்கிறது புவனா"

"திவ்யாவிடம் நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே"

"தவறுதான் புவனா. அதற்காக உன்னை நான் எவ்வளவு திறமையான பெண் என்று நினைத்திருந்தேன் தெரியுமா? ஆனால் ஒரு சின்ன காரியத்திற்காக… பிரிய நினைத்தாயே. இது என்ன நியாயம். திவ்யா இல்லாத ஒரு ஆணாக என்னை மணந்திருந்தால் நம் காதல், நேசம் எல்லாம் வேற மாதிரி இருந்திருக்குமோ…. நான் உன்மேல் பாசம் காட்டத் தவறிவிட்டேனோ புவனா?"

"அய்யய்யோ அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அத்தான். உங்களை மாதிரி ஒரு நல்ல மனிதரை நான் இந்த உலகில் பார்ப்பது கடினம் அத்தான்."

"அப்புறம் ஏன் என்னை விட்டுவிட்டுப்போக நினைத்தாய்?"

இரஜகை நிலவன்

## அத்தியாயம் -23 பயணச் சீட்டு

ரயில் மெதுவாகக் கிளம்ப ஆரம்பிக்க "அத்தான் நான் உங்களோடு வந்துவிடுகிறேன். என்னைத் திரும்ப வீட்டிற்குக் கூட்டிப் போங்கள்" என்றாள் புவனா.
கூடவே ஓடி வந்த சிவா, ரயிலில் தொற்றிக் கொள்ள "அத்தான் ரயிலின் வேகம் அதிகரிக்கிறது. நாம் இறங்கி விடலாம்" என்று பெட்டிகளை எடுத்து கீழே போட்டுவிட்டு புவனா இறங்க முயற்சிக்க, சிவா அவளைத் தாங்கிக் கொண்டு ரயிலிருந்து குதித்தான்.
அருகிலிருந்த சிக்னல் போஸ்டில் புவனாவின் தலை தட்டி விட மெதுவாக ரத்தம் வர ஆரம்பித்தது.
போய்க் கொண்டிருந்த ரயிலையே பார்த்துக் கொண்டிருந்த சிவா, திரும்பி புவனாவைப் பார்த்து "அய்யய்யோ தலையில் ரத்தம் வருகிறது" என்று அவளுடைய தலையில் கர்ச்சீப்பால் கட்டுப் போட்டான்.
அப்படியே அவன் மேல் சாய்ந்து கொண்ட புவனா "என்னை மன்னித்து விடுங்கள் அத்தான்" என்று கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள்.
"பரவாயில்லை. அழாதே" என்று அவளை ஆதரவாகப் பற்றிக் கொண்டு மெதுவாக ரயில்வே நிலையத்திற்கு வெளியே வந்தான்.
டாக்ஸி பிடித்து பைகளை வைத்து விட்டு "சாக்கி நாக்கா சலோ" என்றவன் புவனாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு "நான் திவ்யாவிடம் எடுத்துச் சொல்கிறேன். கூடிய சீக்கிரம் உன்னை அம்மா என்று கூப்பிட வைக்கிறேன்" என்றான் ஆறுதலாக.
"வேண்டாம் அத்தான்.. திவ்யா என்னை அத்தா என்றே கூப்பிடட்டும். என்றைக்கு என் அன்பை புரிந்து கொண்டு அம்மா என்று கூப்பிடுகிறாளோ அதுவரைக் காத்திருக்கிறேன்." என்றவாறு அவன் மார்பில் சாய்ந்தாள்.
"ஏய் நாம் டாக்ஸியில் அமர்ந்திருக்கிறோம்" என்று சிரித்தான் சிவா.
"இருந்தாலென்ன. என் அத்தான் மார்பிலேதானே படர்ந்திருக்கிறேன்" என்று அவளும் சேர்ந்து சிரிக்க டாக்ஸி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

முற்றும்

இரஜகை நிலவன்

# ச.து.சுப்பிரமணிய யோகி

## கட்டுரை

### பிறப்பு:



கேரளாவில் உள்ள எல்லப்பள்ளி என்ற சிறிய கிராமத்தில் துரைசாமி - மீனாட்சியம்மாள் தம்பதிக்கு நவம்பர் 30, 1904 அன்று மகனாய்ப் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன். ஆனால் அது நாளடைவில் "சங்ககிரி துரைசாமி சுப்பிரமணிய யோகியார்" என்றானது. வழக்குரைஞராகப் பணிபுரிந்த தமது தந்தையிடம், ஆங்கிலம் கற்றார். தந்தை திடீரென்று காலமாகிவிட்டதால், குடும்பம் சங்ககிரிக்குக் குடிபெயர்ந்தது. சங்ககிரி தொடக்கப் பள்ளியிலும் பின்னர் ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளியிலும் பயின்று தேர்ச்சி பெற்றார்.

இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்று விளங்கினார் யோகி. தமது ஒன்பதாவது வயதில் பாரதியைப் போல, "பாலபாரதி" எனும் பட்டம் பெற்றார்.

### விடுதலைப் போராட்டத்தில் இணைவு:

1925ஆம் ஆண்டு கமலாம்பாள் என்பவரை வாழ்க்கைத் துணையாக ஏற்றார். உதகமண்டலம் காவல்துறை அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, காந்தியடிகள் ஊட்டிய விடுதலை வேட்கை, யோகியாரை, அரசாங்க வேலையைத் தூக்கியெறியச் செய்து, விடுதலைப் போராட்டத்தில் நாட்டம் கொள்ளவைத்தது. சென்னையில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்திலும் கலந்து கொண்டார். 1932ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் தேதி ஈரோட்டில் நடந்த மறியல் போராட்டத்தில், தடையை மீறிக் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு, ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார், ராஜாஜி ஆகியோருடன் சிறையில் இருந்துள்ளார் யோகியார்.

குமர.தர்மசீலன்,இதழாசிரியர்

**விடுதலைப் போராட்டத்தில் இணைவு:**

தனது சிறை அனுபவங்களை, "சிறைச்சாலை ஓர் தவச்சாலை; அது ஒரு "புன்மைக் கோட்டம்"; இழிவுக்குகை; ஆனால், அதுவே நமது சுதந்திர தேவியின் கோயில் வாயில்! அடிமைத்தனத்தின் குறுகிய சந்துகளில் சென்றால் தான், நாம் அழகிய அகண்ட விடுதலையின் ராஜபாட்டையில் நடக்க முடியும். ஆகவே, சிறைச்சாலையை நான் வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன்; போற்றுகிறேன்; சிறைகள் நீடு வாழ்க!" என, "எனது சிறைவாசம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**இதழாசிரியராக:**

"தேசபக்த கீதம்" என்ற கவிதை நூலை 1924ஆம் ஆண்டு, முதன் முதலாக வெளியிட்டார்.

- புதுமை
- பித்தன்
- குடிநூல்
- குமாரவிகடன்
- சுதந்திர சங்கு
- ஆனந்தபோதினி

ஆகிய இதழ்களில் ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ள யோகி. இந்து நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கில நூல்களுக்கு விமர்சன உரையும் எழுதியுள்ளார்.

**நூல்கள் இயற்றல்:**

1935ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் பொன்விழா கவிதைப் போட்டியில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்றார்.


- தேசபக்த கீதம்
- தமிழ்க்குமரி
- கதையைக் கேளடா தமிழா

ஆகிய கவிதை நூல்களையும்,

- "கவி உலகில் கம்பர்" என்ற உரைநடை நூலையும்
- "குளத்தங்கரைக் குயில்கள்",
- "மரண தாண்டவம்" ஆகிய சிறுகதைத் தொகுப்புகளையும்
- "காமினி", • "பவானி", • "நவபாரதம்" ஆகிய கவிதை நாடகங்களையும்
- "எனது சிறைவாசம்" என்ற தன் வரலாற்றையும்
- "கவிபாரதி" என்ற திறனாய்வையும்
- "கொங்கர் குறவஞ்சி" என்ற நாட்டிய நாடகத்தையும்

குமர.தர்மசீலன்,இதழாசிரியர்

**நூல்கள் இயற்றல்:**




- "எனது சிறைவாசம்" என்ற தன் வரலாற்றையும்
- "கவிபாரதி" என்ற திறனாய்வையும்
- "கொங்கர் குறவஞ்சி" என்ற நாட்டிய நாடகத்தையும்
- சாத்தனார் எழுதிய கூத்த நூலுக்கு (பரதநாட்டியம் பற்றியது) பொழிப்புரையும் பதவுரையும் எழுதியுள்ளார்.

**மொழிபெயர்ப்பு நூல்கள்:**

- "ரூபையாத்",
- "மனிதனைப் பாடுவேன்" (வால்ட் விட்மன் கவிதைகள்)(1958) (ஜோதி நிலையம்)
- "அத்தர்",
- "இதுதான் ருசியா",
- "கடலும் கிழவனும்",
- "மான்குட்டி" ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் இருந்து மொழிமாற்றம் செய்துள்ளார்.

மேனாட்டுக் கவிஞர்கள், வால் விட்மேன், ஹெமிங்வே ஆகியோரது ஆங்கிலக் கவிதைகளையும் தமிழில் கவிதை வடிவிலே மொழி பெயர்த்து அளித்துள்ளார்.

காரைசித்தர் எழுதிய "கனகவைப்பு" என்ற தமிழ் நூலையும், கம்பராமாயணத்தில், "சீதா கல்யாணம்" என்ற பகுதியையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அளித்துள்ளார்.
புதுதில்லியில் சுதந்திர தினக் கவிதையை அப்போதைய பிரதமராக இருந்த நேரு முன்னிலையில் பாடி, பாராட்டைப் பெற்றார். அவரது அக்கவிதை, தமிழிலும், ஆங்கிலத்திலும் அகில இந்திய வானொலியில் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது.


குமர.தர்மசீலன்,இதழாசிரியர்

### திரைப்படத் துறையில்:

தமிழ்த் திரைப்படங்களுக்குக் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதியதுடன் சில படங்களில் இயக்குனராகப் பணியாற்றியிருக்கிறார்:



இரு சகோதரர்கள் (1936) — கதை, வசனம், பாடல்
பக்த அருணகிரி (1937) - கதை, வசனம், பாடல், இயக்கம்
அதிர்ஷ்டம் (1939) - கதை, வசனம், பாடல், இயக்கம்
கிருஷ்ணகுமார் (1941) — இயக்கம்
ஆனந்தன்(1942) - இயக்கம், தயாரிப்பு
லட்சுமி (1953) - வசனம், பாடல்
கிருஷ்ண பக்தி (1949) - வசனம்

ச.து.சு.யோகியார் இதுதவிர சில திரைப்படங்களில் பாடல்கள் மட்டும் எழுதியிருக்கிறார். வானொலிக்கு பல நாடகங்கள் எழுதினார்.

### விருதுகள்:

ச.து.சு.யோகியார் 1963-ம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் வழங்கும் சிறந்த திரைப்பட வசன கர்த்தாவுக்கான தங்கப் பதக்கம் பெற்றார்.

### வாழ்க்கைப் பதிவுகள், நினைவகங்கள்:

1932-ல் சிறைவாச அனுபவங்களை ச.து.சு.யோகியார் 'எனது சிறைவாசம்' என்னும் தன் வரலாற்று நூலாக எழுதினார்.
சாகித்திய அகாடமி வெளியிட்ட இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் "ச.து.சு. யோகியார்" என்னும் வாழ்க்கை வரலாற்று நூல் அவரது மகன் எஸ்.ஆர். அசோக்குமார்(சலன்) எழுதி வெளியானது

### மறைவு:

ச.து.சு.யோகியார் ஜூலை 27, 1963 அன்று காலை ஐந்து மணியளவில் மறைந்தார்.

குமர.தர்மசீலன்,இதழாசிரியர்

நாளை

# நமதே

## எதிலும் வாழ பழகிக்கொள்
## அப்போதுதான்
## எதையும் தாங்கும்
## இதயம் வரும்.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே  முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com